## மாநிலங்களின் ஆலோசனையோடு புதிய மசோதா தேவை!

# தென்னிந்தியாவின் தயவு இன்றி - ஒட்டுமொத்த அரசியலமைப்பையே மாற்றத் துடிக்கும் - பா.ஜ.க.வின் சதியை முறியடிப்போம்!

## மக்களவையில் — கனிமொழி கருணாநிதி எழுச்சி உரை!




**புதுடெல்லி, ஏப்.19**

**நாடாளுமன்ற மக்களவையில், 131–வது அரசியலமைப்புத் திருத்த மசோதா மற்றும் தொகுதி மறுவரையறை மசோதா மீதான விவாதத்தில், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் – கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–**

**இதுதான் நாடாளுமன்றத்துக்கு தரும் மரியாதையா?**

“இன்று இந்த அவையின் முன் நான் நிற்பது, வெறும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது எனது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதிநிதியாகவோ மட்டுமல்ல; மாறாக, எங்கள் மாநிலத் தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையிலேயே, ‘உங்கள் வாக்குகளின் மதிப்பு குறையும்; இந்த நாடாளுமன்றத்தில் உங்கள் குரலின் வலிமை மழுங்கடிக்கப்படும்’ என்ற நிலைக்கு ஆளாக்கப்படும் தமிழ்நாட்டின் 8 கோடி மக்களின் குரலாகவே நான் இங்கு நிற்கிறேன்.

மேலும், நாம் இங்கு ஒரு மசோதாவைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும்போது, நேற்று இரவு 10 மணியளவில்நீங்கள் அதைப் பற்றிய நோட்டிபிகேஷனை வெளியிட்டது மிகவும் அதிர்ச்சியளிக்கிறது.

இங்கு மசோதாவை விவாதிப்பதற்காக எங்களை எல்லாம் அழைத்துவிட்டு அந்த அறிவிக்கையை வெளியிட்டதன் அவசியம்தான் என்ன? அதன் தேவைதான் என்ன? இதன் அர்த்தம் என்ன? இந்த அவையின் மீது நீங்கள் வைத்திருக்கும் மரியாதைதான் என்ன?

**கூட்டாட்சி முறை மீதான கடுமையான தாக்குதல்!**

அவசரகதியில் கூட்டப்பட்டதும், எனது மாநிலத்திலும் பிற பல மாநிலங்களிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தேர்தல்களைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன் திட்டமிடப்பட்டதுமான இந்தச் சிறப்பு அமர்வில், அரசாங்கம் மூன்று மசோதாக்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

எனது கட்சியின் சார்பாகவும், எனது மாநிலத்தின் சார்பாகவும், இம்மசோதாக்களை எதிர்த்துப் பேசுவதற்காகவே நான் இங்கு நிற்கிறேன்.

பெண்களுக்கான இடஒதுக்கீட்டிற்கு ஆதரவானவை போல வேடமிட்டு வரும் இம் மூன்று மசோதாக்களும், இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பின் மீது தொடுக்கப்படும் மிகக் கடுமையான தாக்குதல் ஆகும்.

**தொகுதி மறுவரையறையின் வரலாறு**

நான் மிக அடிப்படையிலிருந்து தொடங்க விரும்புகிறேன்; ஏனெனில், இந்த அரசாங்கம் எப்போதும் பொதுமக்களுக்கு வரலாற்றைப் பற்றிய புரிதல் இருக்காது என்ற நம்பிக்கையிலேயே செயல்பட்டு வருகிறது.

இந்தியாவில் தொகுதி மறுவரையறை (Delimitation) செய்யப்பட்டதன் வரலாறு என்பது, அதன் மையக்கருவாக ஒரு வாக்குறுதியின் (Promise) வரலாற்றையே கொண்டுள்ளது.

அந்த வாக்குறுதி, நாடாளுமன்றத்தால் தென் மாநிலங்களான தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களின் மக்களுக்கு அளிக்கப்பட்ட ஒன்றாகும். பாரதிய ஜனதா கட்சியின் ஆதிக்கத்தை எதிர்த்து நின்று, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான முன்மாதிரி மாநிலங்களாகத் திகழும் ஐந்து மாநிலங்கள் இவை.

இந்தியக் குடியரசு நிறுவப்பட்ட சிறிது காலத்திலேயே, அதாவது 1952-ஆம் ஆண்டிலேயே தொகுதி மறுவரையறைக்கான செயல்முறை தொடங்கப்பட்டது. மக்கள் தொகையியல் சார்ந்த ஒரு பிரச்சனைக்கு, அரசியலமைப்பு ரீதியான ஒரு தீர்வாகவே இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது, மக்கள் தொகை வளர்ச்சியையும், அதற்கேற்ற நியாயமான பிரதிநிதித்துவத்தையும் எவ்வாறு சமநிலையில் வைத்திருப்பது என்பதற்கான தீர்வாக அது அமைந்தது.

நம் அனைவரும், அரசியலமைப்பின் 82 மற்றும் 170 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்தோம். 1973-ஆம் ஆண்டில், மூன்றாவது தொகுதி மறுவரையறை ஆணையம் தனது பணிகளை நிறைவு செய்தபோது, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் தீவிரமடைந்தன.

பெருகிவரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் நோக்கில், நாடு முழுவதும் ‘தேசிய மக்கள் தொகை கொள்கை’ அறிமுகப்படுத்தப்பட்டது; ஏனெனில், அக்காலகட்டத்தில் மக்கள் தொகை மிகத் தீவிரமாகப் பெருகி, ஒரு வெடிப்பு நிலையை எட்டியிருந்தது.

அதன் விளைவாக, 1976-ஆம் ஆண்டில் தொகுதி மறுவரையறைப் பணிகளை முடக்கி வைக்கும் (Freeze) முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், இந்த முடக்கம் 25 ஆண்டுகாலத்திற்கு நீடிக்கும் வகையில் நிர்ணயிக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினையை அங்கீகரித்து, மசோதாவைக் கொண்டுவந்தது காங்கிரஸ் அரசு, அதாவது திருமதி இந்திரா காந்தியின் அரசுதான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

1976-ஆம் ஆண்டின் 42-வது திருத்தத்தில், நாடாளுமன்றம் மக்களவையின் மொத்த இடங்களின் எண்ணிக்கையை 543 ஆகவே வைத்திருந்தது. இந்த முடக்கம் ஒரு தொழில்நுட்ப விவரம் அல்ல. அது ஒரு அரசியலமைப்புக்கு உட்பட்ட உடன்படிக்கை; தேசியக் கொள்கையின் நோக்கங்களுக்கு இணங்குவதால் தங்களின் அரசியல் குரலை இழக்க நேரிடாது என்று இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் அளிக்கப்பட்ட ஒரு வாக்குறுதி.

**தேசத்துக்கு ஒத்துழைத்த தென்னிந்திய மாநிலங்கள்!**

காலப்போக்கில், தென்னிந்திய மாநிலங்களான தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகியவை பள்ளிகள், மருத்துவமனைகள், பெண்கள் நலம் ஆகியவற்றில் முதலீடு செய்யத் தொடங்கின.

நமது மக்கள்தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற மத்திய அரசின் தொடர்ச்சியான அழைப்புக்கு நாங்கள் செவிசாய்த்தோம். நாங்கள் அதற்குக் கீழ்ப்படிந்தோம். எங்கள் கருவுறுதல் விகிதங்கள் குறைந்தன. எங்கள் குடும்பங்கள் சிறியதாகின.

சில மாநிலங்கள், குறிப்பாக தென்னிந்திய மாநிலங்களும் பஞ்சாப் போன்ற பிற மாநிலங்களும் இந்த சமூகக் குறியீடுகளில் சிறப்பாகச் செயல்பட்டுள்ளன என்பதையும், மற்ற சில மாநிலங்கள் பின்தங்கியுள்ளன என்பதையும் புரிந்துகொண்டு, அந்த நேரத்தில் தென்னிந்திய மக்களின் குரல்களுக்குச் செவிசாய்த்த ஒரு மத்திய அரசு இருந்தது.

**வாஜ்பாயை பாராட்டுகிறோம்!**

ஆம், நீங்கள் அதற்குத் தகுதியானவர்கள் என்றால், நான் உங்களையும் பாராட்ட வேண்டும். எப்போதும் எங்களில் குறை கண்டுபிடிக்கும் உங்களைப் போன்றவர்கள் நாங்கள் அல்ல. உங்களைப் பாராட்டுவதற்கு ஏதேனும் ஒன்று இருக்கும்போது, நாங்கள் எப்போதும் பாராட்டுவோம்.

எனவே, வாஜ்பாய் அரசாங்கத்தின் கீழ், நாடாளுமன்றம் 84வது திருத்தத்தின் மூலம், 2026க்குப் பிறகு வரும் முதல் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு வரை அந்த முடக்கத்தை நீட்டித்தது. அதாவது மேலும் 24 வருடப் பாதுகாப்பு கொடுத்தது.

ஏனென்றால் அப்போதைய நாடாளுமன்றம் தனது கூட்டு ஞானத்தால் இந்த அநீதிக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டது.

**உங்களுக்கு நீங்களே முரண்படுகிறீர்கள்!**

இப்போது நாம் ஏன் இடங்களை 850 ஆக அதிகரிக்க வேண்டும்? எந்த அடிப்படையில்? மக்கள்தொகை அமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று அரசின் அறிக்கை கூறுகிறது. ஆனாலும், நீங்கள் தொகுதி மறுவரையறை செய்ய 15 வருடங்கள் பழமையான 2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்புத் தரவைப் பயன்படுத்துகிறீர்கள். 850 இடங்கள் விஷயத்தில் நீங்களே உங்களுக்கு முரண்படுகிறீர்கள்.

இடங்களை 850 ஆக உயர்த்திய பிறகு, பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அடுத்த 5 ஆண்டுகளுக்கு இந்த நாடாளுமன்றத்தில் பேசவாய்ப்பு கூட கிடைக்காமல் போகலாம்.

**தமிழ்நாட்டின் சாதனைகள்!**

தமிழ்நாட்டில் உள்ள ஒரு குடும்பத்தைப் பற்றி இந்த அவையில் நான் சொல்ல விரும்புகிறேன், ஒரு தாயும் தந்தையும், முதல் தலைமுறை எழுத்தறிவு பெற்றவர்கள். அவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்ததால், ஐந்து, ஆறு குழந்தைகள் அல்ல, இரண்டு குழந்தைகள் மட்டுமே பெற்றெடுத்தனர். ஏனெனில், நாட்டிற்கு அதுவே சரியான செயல் என்று அரசாங்கம் அவர்களிடம் கூறியது.

மேலும், தங்கள் பிள்ளைகள் ஒரு சிறந்த வாழ்க்கையைப் பெற வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். இதுவே தமிழ்நாட்டின் மற்றும் தென் இந்திய மாநிலங்களின் கதையாகும். இன்று, தமிழ்நாட்டின் மொத்தக் கருவுறுதல் விகிதம் (Total Fertility Rate) 1.6 ஆக உள்ளது; இது பிரான்ஸை விடவும், ஆஸ்திரேலியாவை விடவும், உங்கள் நண்பரான அமெரிக்காவை விடவும் குறைவான அளவாகும்.

மக்கள் தொகையியல் வல்லுநர்கள் ‘மக்கள் தொகையியல் மாற்றம்’ (Demographic Transition) என்று குறிப்பிடும் ஒரு நிலையை நாம் எட்டிவிட்டோம். நமது மக்கள் தொகை தற்போது நிலையாக உள்ளது. மனித மேம்பாட்டின் எந்தவொரு அளவுகோலைக் கொண்டு பார்த்தாலும், தமிழ்நாட்டுப் பெண்கள் கல்வியறிவு பெற்றவர்களாகத் திகழ்கின்றனர்.

**சாதித்த தமிழ்நாட்டுக்கு நீங்கள் சொல்வது என்ன?**

தமிழ்நாடு ஒரு வெற்றி மாடலாகும். இதற்காக நாடு பெருமை கொள்ள வேண்டும். ஆனால், தமிழ்நாட்டில் உள்ள அந்தக் குடும்பத்திடம் இந்த அரசாங்கம் என்ன சொல்கிறது?

“மன்னிக்கவும், நீங்கள் ஒரு தவறான முடிவை எடுத்துவிட்டீர்கள். நாங்கள் சொன்னதைக் கேட்டு நடந்ததன் மூலம் நீங்கள் ஒரு தவறை இழைத்துவிட்டீர்கள். நீங்கள் இந்த நாட்டின் மீது அக்கறை கொண்டிருந்ததால், இதைக் கேட்டு தவறு செய்துவிட்டீர்கள். நீங்கள் நாட்டிற்கு முன்னுரிமை கொடுத்ததால், நீங்கள் துன்பப்பட வேண்டும். நாங்கள் உங்கள் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கப் போகிறோம்” என்று சொல்கிறது அரசாங்கம். இது நியாயமா?

1971 முதல் உத்தரப் பிரதேசத்தின் மக்கள் தொகை 120% அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டின் மக்கள் தொகை 15% மட்டுமே அதிகரித்துள்ளது. மேலும், நேற்று உள்துறை அமைச்சர் கூறியதற்கு மாறாக, மசோதாவின் 4-வது பிரிவு, சமீபத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு புள்ளிவிவரங்களின் அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யப்படும் என்று தெளிவாகக் கூறுகிறது.

**பெரியார் கற்றுக் கொடுத்த நீதி!**

உள்துறை அமைச்சர் ஒன்று சொல்கிறார், மசோதாவோ வேறொன்று சொல்கிறது. இப்போது நம்மிடம் இருக்கும் சமீபத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011-ஆம் ஆண்டு. ஆனால் 2002 இல் நமது அரசியலமைப்புத் திருத்தம் 2026 வரை இருக்கிறது

2011 சூத்திரத்தின்படி, உத்தரப் பிரதேசம் 13 இடங்களைப் பெறுகிறது. தமிழ்நாடு 11 இடங்களை இழக்கிறது. ஆனால் நேற்று உள்துறை அமைச்சர், 50% அதிகரிப்பதன் மூலம் தமிழ்நாடு அதாவது, 39 இடங்களைக் கொண்ட மாநிலம் 59 இடங்களைப் பெறும் என்கிறார்.

நான் சொல்கிறேன். நீதி என்பது ஒவ்வொருவருக்கும் ஒரே மாதிரியானதைக் கொடுப்பது அல்ல, நீதி என்பது ஒவ்வொருவருக்கும் அவர்களுக்குத் தேவையானதையும், அவர்கள் தகுதியானதையும் கொடுப்பதே என்று நமது சித்தாந்தத் தலைவர் பெரியார் எங்களுக்கு கற்றுக்கொடுத்திருக்கிறார்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக, உங்கள் அரசாங்கம் தனக்குத் தேவையானது மற்றும் தனக்கு உரியது எதுவோ, அதுவே முழு தேசத்திற்கும் உரியது மற்றும் முழு தேசத்திற்கும் தேவையானது என்று நினைக்கிறது.

**இரண்டு சட்டச் சிக்கல்கள்!**

இதைத் தவிர, இந்த மசோதாவில் உள்ள இரண்டு முக்கியமான சட்டச் சிக்கல்களை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பாராளுமன்றம் சட்டப்படி நிர்ணயிக்கும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதி வரையறை செய்யப்படும் என்று அரசியலமைப்பு மசோதா கூறுகிறது. இது தெளிவற்றதாகவும், எல்லாவற்றையும் திறந்தே வைப்பதாகவும் உள்ளது.

இதன் நேரடிப் பொருள் என்னவென்றால், பாராளுமன்றத்தில் எந்தக் கட்சிக்கு பெரும்பான்மை உள்ளதோ, அந்தக் கட்சியே இந்த நாட்டின் தேர்தல் வரைபடத்தை வரைய எந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பைப் பயன்படுத்த வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறது. இன்று நீங்கள் 2011-ஐத் தேர்ந்தெடுக்கலாம், நாளை நீங்கள் 2031-ஐத் தேர்ந்தெடுக்கலாம், மறுநாள் அது 1991-ஆக இருக்கலாம். இது சிந்திக்காமல் செயல்படுவதையோ அல்லது இந்த நாட்டின் மீது தனது சொந்த நோக்கங்களைத் திணிக்கத் தீர்மானித்த மனதையோ காட்டுகிறது.

இரண்டாவதாக, தொகுதி வரையறை ஆணையத்திற்கு, இந்தியத் தலைமை நீதிபதியுடனோ, எந்த மாநில அரசுடனோ கலந்தாலோசிக்காமல், பாராளுமன்ற ஒப்புதல் எதுவும் பெறாமல், மத்திய அரசால் முழுமையாக நியமிக்கப்பட்ட ஒரு ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமை தாங்குவார்.

எல்லை நிர்ணய மசோதாவின் 5(4)-வது பிரிவின்படி, மாநிலங்களுக்கு ‘இணை உறுப்பினர்கள்’ என்று அழைக்கப்படுபவர்கள் வழங்கப்படுகிறார்கள்; இவர்கள் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் (MP) மற்றும் ஐந்து சட்டமன்ற உறுப்பினர்கள் (MLA) ஆவர். இவர்களுக்கு வாக்களிக்க அனுமதி இல்லை; ஆணையத்தின் முடிவுகளில் கையெழுத்திட அனுமதி இல்லை; பார்வையாளர்களாக ஓரத்தில் அமர்ந்து வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறு எதையும் செய்ய இவர்களுக்கு அனுமதி இல்லை.

மாநிலம் முழுவதும் 50% அதிகரிப்பு இருக்கும் என்று உள்துறை அமைச்சர் கூறினார். எல்லை நிர்ணய ஆணையம், உள்துறை அமைச்சரின் பரிந்துரையை முழுமையாக ஏற்காத பட்சத்தில் என்ன நடக்கும் என்பதை நான் அறிய விரும்புகிறேன். நீங்கள் வழக்கமாகச் செய்வது போலவே, எல்லை நிர்ணய ஆணையத்தின் மீதும் உங்கள் அதிகாரத்தை வலுக்கட்டாயமாகச் செலுத்தி (bulldoze) நசுக்கப் போகிறீர்களா? அல்லது, எல்லை நிர்ணய ஆணையத்தின் உத்தரவுகளை அரசாங்கம் எதிர்த்து வழக்குத் தொடருமா?

ஏனெனில், 2026-ஆம் ஆண்டின் எல்லை நிர்ணய மசோதாவின் 10(2) பிரிவானது, எல்லை நிர்ணய ஆணையம் தனது உத்தரவுகளை வெளியிட்ட பிறகு, அந்த உத்தரவுகளை எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்குள்ளாக்க முடியாது என்று கூறுகிறது. இத்தகைய சூழ்நிலையில், நியாயமான எல்லை நிர்ணயத்தை நாடி நாங்கள் எங்கு செல்வது? எங்களுக்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?

**சட்டமன்றங்களால் ஏன் ஏற்கப்படவில்லை?**

நாடாளுமன்றத்தில் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தைப் பாதிக்கும் அரசியலமைப்புத் திருத்தங்கள், நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படுவதுடன் மட்டுமல்லாமல், குறைந்தது பாதி மாநில சட்டமன்றங்களாலும் ஒப்புதல் அளிக்கப்பட்டு (ratified) உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று அரசியலமைப்பின் 368-வது பிரிவு கூறுகிறது.

இந்த எல்லை நிர்ணய மசோதா நியாயமானது என்பதில் இந்த அரசாங்கத்திற்கு அவ்வளவு நம்பிக்கை இருக்குமானால், ஏன் இந்த மசோதாக்களைத் தமிழ்நாடு சட்டமன்றத்தின் முன்போ, கேரள சட்டமன்றத்தின் முன்போ, கர்நாடக சட்டமன்றத்தின் முன்போ அல்லது வேறு எந்தச் சட்டமன்றத்தின் முன்போ தாக்கல் செய்யவில்லை?

இந்த அரசாங்கம் ‘கூட்டுறவு கூட்டாட்சி’ (cooperative federalism) தத்துவத்தை உண்மையாகவே நம்பியிருக்குமானால்—பல்வேறு மேடைகளில் ஆயிரக்கணக்கான முறை அவர்கள் முழங்கிய அந்த முழக்கத்தை—ஏன் மாநில சட்டமன்றங்களை எதிர்கொள்ளாமல் ஓடி ஒளிகிறீர்கள்?

நீங்கள் இதுகுறித்து ஒரு கூட்டத்தையாவது கூட்டியிருக்கிறீர்களா? முதலமைச்சர்களுடன் கலந்தாலோசித்திருக்கிறீர்களா? மாநில அரசுகளுடன் பேசியிருக்கிறீர்களா? குறைந்தபட்சம் அதற்கான முயற்சியையாவது எடுத்திருக்கிறீர்களா?

**தோல்வியையே அரசியல் ஆதாயமாக்கும் பா.ஜ.க.!**

செப்டம்பர் 2023-இல், பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவை இந்த அரசாங்கம் மிகுந்த ஆரவாரத்துடன் நிறைவேற்றியது. பிரதமர் இதனை ஒரு ‘நாகரிக ரீதியான கடமை’ (civilizational commitment) என்று வர்ணித்தார். ஆனால், அதே சட்டத்தில் அவர்கள் ஒரு நிபந்தனையைச் சேர்த்தார்கள். 2021-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்புக்குப் பிறகுதான் பெண்கள் இடஒதுக்கீடு நடைமுறைக்கு வரும் என்று கூறினார்கள்; ஆனால் அந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு அடுத்த ஆண்டு வரை நடைபெறாது என்ற நிலை உள்ளது.

2021-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு எப்போது நடைபெற வேண்டியிருந்தது? 2021-ஆம் ஆண்டிலேயே நடைபெற வேண்டியிருந்தது.

ஆனால் என்ன நடந்தது? கோவிட் (Covid) பெருந்தொற்று காரணமாக மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒத்திவைக்க வேண்டியதாயிற்று என்று நீங்கள் கூறினீர்கள். பின்னர், ‘நிர்வாகக் காரணங்களால்’ (operational reasons) எங்களால் கணக்கெடுப்பை நடத்த முடியவில்லை என்று கூறினீர்கள். இறுதியாக, அது குறித்து ஏதும் பேசாமலேயே விட்டுவிட்டு, நீங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தாமலே விட்டுவிட்டீர்கள்.

ஆக, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான, நவீன மக்கள் தொகைக் கணக்கெடுப்பைக் கண்டுபிடித்த நாடான நம்மால், இந்த நாட்டில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்த முடியவில்லை. இப்போது அரசியல் ரீதியாக வசதியாக இருப்பதால், இந்திய ஜனநாயகத்தின் வரைபடத்தை மீண்டும் வரைய 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பைப் பயன்படுத்த விரும்புகிறார்கள்.

அவர்கள் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை ஒத்திவைத்துவிட்டு, இப்போது அந்தப் பழைய கணக்கெடுப்பைக் கொண்டு தங்களுக்குத் தாங்களே வெகுமதி அளித்துக்கொள்கிறார்கள். நான் உங்களை உண்மையிலேயே பாராட்டுகிறேன். தனது தோல்வியைக் கூட ஒரு அரசியல் ஆதாயமாக மாற்றிக்கொள்ளக்கூடிய ஒரே அரசாங்கம் நீங்கள்தான்.

**12 வருட மெத்தனமும் இரு வாரம் பொறுமையில்லாத அவசரமும்!**

ஐந்து மாநிலத் தேர்தல்களுக்கு மத்தியில் இந்தச் சிறப்புக் கூட்டத்தொடர் கூட்டப்பட்டிருப்பதைப் பாருங்கள். நேரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், அரசியலில் நேரம் என்பதுதான் எல்லாமே. இந்த மசோதாவின் நேரம் மிகவும் அப்பட்டமான, மூச்சடைக்க வைக்கும் அரசியல் ரீதியானது. இதன் துணிச்சலைக் கண்டு நான் கிட்டத்தட்ட பிரமித்துவிட்டேன்.

இந்தக் கூட்டத்தொடரைத் தேர்தல்களுக்குப் பிறகு நடத்துமாறு எதிர்க்கட்சிகள் அனைத்தும் உங்களிடம் கோரிக்கை விடுத்தன. ஆனால் நீங்கள் அதைப் புறக்கணித்தீர்கள்; பெண்களுக்கு உரிமைகளை வழங்குவதும், இந்த மசோதாக்களைக் கொண்டுவருவதும் மிகுந்த அவசரத் தேவை என்று நேற்று எங்களிடம் கூறினீர்கள். உங்களால் இரண்டு வாரங்கள் கூட காத்திருக்க முடியவில்லை.

ஆனால் நீங்கள் 2014-ஆம் ஆண்டிலேயே ஆட்சிக்கு வந்துவிட்டீர்கள். பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவைக் கொண்டுவருமாறு எதிர்க்கட்சிகள் அனைத்தும் தொடர்ந்து உங்களிடம் வலியுறுத்தி வருகின்றன. எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் உங்களுக்குக் கடிதம் எழுதியுள்ளனர். எங்கள் தலைவர், அதாவது எங்கள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்திப் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார். இந்த மசோதாவை நிறைவேற்றக் கோரி, தி.மு.க.வின் மகளிர் அணி டெல்லியில் பேரணி ஒன்றையும் நடத்தியது. நாடாளுமன்றத்தில் நாங்கள் இந்தப் பிரச்சினையை ஆயிரக்கணக்கான முறை எழுப்பியுள்ளோம்; ஆனால் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, இதன் அவசரத் தன்மையை நீங்கள் கண்டுகொள்ளவோ அல்லது புரிந்துகொள்ளவோ இல்லை.

ஆனால் இன்றோ, உங்களால் இரண்டு வாரங்கள் கூட காத்திருக்க முடியவில்லை; அதோடு, பெண்களுக்குரிய உரிமைகள் மீது உங்களுக்கு அக்கறை இருப்பதாக நாங்கள் நம்ப வேண்டும் என்றும் நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்.

**பெண்களை மனிதக் கேடயமாக்கும் அவலம்!**

நீங்கள் பேசுவது ஏதோ அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றியது அல்ல. இது குறிப்பிட்ட சில மாநிலங்களில், தேர்தல் ரீதியாக உங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கான ஒரு தந்திரோபாயமே ஆகும்; ஏனெனில், பெரும்பாலான மாநிலங்களில் உங்கள் கட்சிக்குச் சிறப்பான வெற்றி கிடைக்கப்போவதில்லை என்பது உங்களுக்குத் தெரியும்.

2023-ஆம் ஆண்டின் 106-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமான, ‘பெண்களுக்கான இட ஒதுக்கீடு சட்டத்தை’ (Women’s Reservation Act), இங்குள்ள பெரும்பாலான எதிர்க்கட்சிகள் வரவேற்றன; தி.மு.க.வும் அதனை வரவேற்றது. ஆனால், அப்போதும் நாங்கள் ஒன்றைச் சொன்னோம்; இப்போதும் அதையே மீண்டும் சொல்கிறோம்: பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவை, தொகுதி மறுவரையறை (Delimitation) நடைமுறையுடன் முடிச்சுப்போடுவது ஒரு சூழ்ச்சியாகும். ஒன்று இல்லாமல் மற்றொன்று சாத்தியமாகாத வகையில், மிகத் திட்டமிட்டு இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், ‘நீங்கள் தொகுதி மறுவரையறையை எதிர்த்தால், பெண்களின் உரிமைகளையே எதிர்க்கிறீர்கள்’ என்று பா.ஜ.க.வால் பிரச்சாரம் செய்ய முடியும். ‘தமிழ்நாட்டின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அழிக்கும் முயற்சியை எதிர்த்தால், நீங்கள்

தொடர்ச்சி 8– ஆம் பக்கம்